# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.73/2022** **நாள் : 17.11.2022**

**சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், அண்ணா பிரதான சாலை, எம்.ஜி.ஆர் நகர் சந்தை சந்திப்பில் உள்ள இயந்திர நுழைவாயிலில் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 18.11.2022 அன்று மாலை 4 மணி முதல் 20.11.2022 அன்று காலை 4 மணி வரை பகுதி 9, 10 மற்றும் பகுதி 13 உட்பட்ட 16 கழிவு நீர் உந்து நிலையங்கள் செயல்படாது**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், அண்ணா பிரதான சாலை, எம்.ஜி.ஆர் நகர் சந்தை சந்திப்பில் உள்ள இயந்திர நுழைவாயிலில் பழுது நீக்கும் பணிகள் 18.11.2022 அன்று மாலை 4 மணி முதல் 20.11.2022 அன்று காலை 4 மணி வரை மேற்கொள்ளப்படுவதால் சிஐடி நகர், சைதாப்பேட்டை, ஜாபர்கான் பேட்டை, அசோக் நகர், கே.கே. நகர், எம்.ஜி.ஆர் நகர், ஈக்காட்டுத்தாங்கல் ஆகிய பகுதிகளில் உள்ள 16 கழிவு நீர் உந்து நிலையங்கள் செயல்படாது.

எனவே, பகுதி-9, 10 மற்றும் பகுதி-13-க்குட்பட்ட இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை எற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர்-9 (தேனாம்பேட்டை) | கைபேசி எண்.8144930909 |
| பகுதிப் பொறியாளர்-10 (கோடம்பாக்கம்) | கைபேசி எண்.8144930910 |
| பகுதிப் பொறியாளர்-13 (அடையாறு) | கைபேசி எண்.8144930913 |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்